Registered as a Newspaper in Ceylon

★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

மலர் 10
இதழ் 195
National Tamil Daily
தேசிய தினசரி

கீலக ஆவணி 8 ஜு' அல் 29 சனிக்கிழமை (24-8-68).




# 4 இராணுவவீரர் விபத்தில் பலி; மூவர் நிலைகவலை
# முல்லைத்தீவில் இராணுவபீரங்கிவண்டி விபத்து

முல்லைத்தீவு, வெள்ளி

**முல்லைத்தீவுக்கும் புதுக்குடியிருப்புக்குமிடையில் இன்று இராணுவ பீரங்கிவண்டியொன்று விபத்தில் சிக்கி குடைசாய்ந்ததில் நான்கு இராணுவசிப்பாய்கள் ஸ்தலத்திலேயே மாண்டனர். மற்றும் மூன்று சிப்பாய்கள் மிக ஆபத்தானநிலையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு கொண்டுசெல்லப்பட்டனர்.**

புதுக்குடியிருப்பிலிருந்து முல்லைத்தீவுக்கு வந்துகொண்டிருந்த இராணுவ மோட்டார் பீரங்கி வண்டி விபத்தில் சிக்கி குடைசாய்ந்தது. வண்டியைச் செலுத்தி வந்த சாரதி உயிர்தப்பினர். ஆனால் அதில் பிரயாணம்செய்த நான்கு சிப்பாய்கள் விபத்து நடந்த இடத்திலேயே மாண்டனர். மற்றும் மூன்று சிப்பாய்கள் ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

ஸ்தலத்தில் மாண்ட சி. ஐ. நந்தசேனு, பி. கே. கருணாரத்தின, அபயரத்தின பண்டா, எஸ். வி. பெரேரா ஆகிய நால்வரின் சடலங்களும் முல்லைத்தீவு ஆஸ்பத்திரி பிரேதசாலையில் வைக்கப்பட்டுள்ளன. நாளை சனிக்கிழமை இவர்களின் மரணம்பற்றிமாஜிஸ்டிரேட் விசாரணை நடத்துவார்.

சமரசிங்க, ராஜபக்ஷ, ரணவீர ஆகிய சிப்பாய்களே ஆபத்தான நிலையிலிருப்பவர்களாவர்.

இவ்விபத்துபற்றி பொலிசார் புலன்விசாரணைசெய்து வருகின்றனர்.

## விமான நிலையத்தில் பீரங்கிகள் முழங்க கொஸிஜின் வரவேற்றார்

# ரஷ்யாவில் செக். ஜனாதிபதிக்கு உற்சாகமான வரவேற்பு

மாஸ்கோ, ஆகஸ்ட் 23

**செக்கோஸ்லவாக்கிய ஜனாதிபதி திரு. ஸ்வபோடா சோவியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இன்று மாஸ்கோவந்துசேர்ந்தபோது அவருக்கு உற்சாகமான வரவேற்பளிக்கப்பட்டது.**

விமானத்திலிருந்து அவர் இறங்கியதும் அவருக்கு மரியாதைசெலுத்துமுகமாக பீரங்கிகள் முழங்கின.

விமானநிலையத்தில் செக். ஜனாதிபதியையும் அவருடன் வந்த செக். அதிகாரிகளையும் ரஷ்யப்பிரதமர் திரு. கொஸிஜின், திரு. பொட்கோர்னி ஆகியோர் வரவேற்றனர். செக்-ரஷ்ய கொடிகள் விமானநிலையம் எங்கும் பறந்த வண்ணமிருந்தன.

செக். ஜனாதிபதி வந்து சேர்ந்தபோது விமான நிலையம் மக்கள் வெள்ளமாக காட்சியளித்தது. செக்-ரஷ்ய கொடிகளை அசைத்து மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். திரு. ஸ்வபோடாவுடன் செக். உதவிப் பிரதம மந்திரியும் பாதுகாப்பு மந்திரியும், நீதிமந்திரியும் நான்கு அதிகாரிகளும் மாஸ்கோவந்துள்ளனர்.

[6ம் பக்கம் பார்க்க]

# பாதுகாப்புசபை தீர்மானத்தை ரஷ்யா 'வீட்டோ' (ரத்து) செய்தது

நியூயோர்க். ஆகஸ்ட் 23

ஐ. நா. பாதுகாப்புச் சபையில் செக்கோஸ்லவாக்கியாவிலிருந்து ரஷ்ய, வார்ஸோத் துருப்புகள் உடனடியாக வெளியேற வேண்டுமெனக் கோரும் 7 மேற்கத்திய நாடுகளின் தீர்மானத்தை ரஷ்யா தனது 'வீட்டோ' ரத்து அதிகாரத்தைப் பிரயோகித்துத் தடைசெய்துள்ளது.

சோவியத் பிரதிநிதி திரு. ஜக்கோப் மாலிக்கின் 90 நிமிடப் பேச்சுக்குப் பின்னரே, ரஷ்யாவின் இந்த "வீட்டோ" வந்தது.

மேற்கத்திய நாடுகளின் தீர்மானத்துக்கு ஆதரவாக 10 நாடுகள் வாக்களித்தன. ரஷ்யாவும், ஹங்கேரியும் எதிர்த்து வாக்களித்தன. இந்தியா, பாகிஸ்தான், அல்ஜீரியா மூன்றும் வாக்களிக்கவில்லை.

### செக். கம்யூனிஸ்ட் புதிய தலைவர்

இதற்கிடையில், பிராக்கில் இரகசியமான இடம் ஒன்றில் சந்தித்து மாநாடு நடத்தியுள்ள செக். கம்யூனிஸ்ட் கட்சி இரு. [illegible] பற்றிய விபரங்கள் கிடைக்கும்வரை, தற்காலிகமாகப் புதிய ஒரு தலைவரைத்தெரிவு செய்துள்ளது. புதிய மத்திய கமிட்டியொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. புதிய தலைவர், ரஷ்ய, வார்ஸோத் துருப்புகள் செக். நாட்டினுள் பிரவேசிக்க முன்னர் [illegible] கமிட்டியின் [illegible]

[6-ம் பக்கம் பார்க்க]

தொழில்நுட்ப மாணவர்

# தொழில் நிலையங்களில் பயிற்சி பெறுவர்

அளவெட்டி, வியாழன்

இலங்கை உயர் தொழில் நுட்ப விஞ்ஞானக் கலாசாலையின் மாணவர்களுக்கான தொழிற் பயிற்சி செப்டம்பர் முதல் திகதி ஆரம்பமாகின்றது. இதற்கான அறிவித்தல் சகல மாணவர்களுக்கும் கலாசாலை பதிவாளரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவர்கள் புகையிரதத் திணைக்களம் தொழிலகம், பொது வேலைப்பகுதி, மின்சாரத் திணைக்களம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், தொலைத்தொடர்பு திணைக்களம் ஆகியவற்றைச் சேர்ந்த தொழில் நிலையங்களில் ஓராண்டு தொழில் பயிற்சி பெறுவர்.

இம்மாணவர்கள் பின்னர் விரிவுரைக் கல்வி பெறுவரெனத் தெரிகிறது.

பொறியியல் மாணவர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்கப்படுவது இலங்கையில் இதுவே முதல்தடவை என்று அறியப்படுகின்றது.

இவ் உயர் தொழில் கலாசாலை சுமார் இரு ஆண்டு

[6ம் பக்கம் பார்க்க]

## சந்நிதி கதவுகள் திறந்தன

யாழ்ப்பாணம், சனி

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் நேற்றே சகலரும் எவ்வித பாகுபாடுமின்றிச் சென்று வழிபட்டனர்.

சந்நிதி ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகிறது. ஆசாரசீலராக ஆலயத்துக்கு வரும் அனைவருக்கும் ஆலயத்தின் கதவுகளைத் திறந்துவிடுவதென ஆலய தர்மகர்த்தர்கள் தீர்மானித்து அதற்கான ஒழுங்குகளைச் செய்திருந்தனர்.

நேற்று வெள்ளிக்கிழமை வழமைபோலப் பெருந்தொகையான அடியார்கள் ஆலயத்துக்குவழிபடச்சென்றிருந்தனர். ஹரிஜனர் பலரும் எவ்வித தடையுமின்றி ஆலயத்தினுள் சென்று வழிபட்டனர்.

### சுவீப் முடிவுகள்

நேற்று குண்டசாலையில் இழுக்கப்பட்ட 208-வது தேசிய லொத்தர் சுவீப் சீட்டிழுப்பு முடிவுகள் நாளை வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

பிரம்மச்சரியத்தால் மனவலிமை மிக அதிகமாகின்றது. வலிமைமிகுந்த மனத்தைக் காமக்குரோதங்கள் அசைக்க முடியாது.

— ஸ்ரீ பரமஹம்சர்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

ஈ ழ்வரணி இவைகளுக்
ஆவணி மாதம் 8-ந் திகதி
(24-8-68)


## சந்நிதி ஆலயம்

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் கதவுகள் இன்று ஆசாரசீலர்களாக வரும் சகலருக்கும் திறந்திருக்கும் என்ற செய்தி சைவ உலகத்துக்கு மட்டுமல்ல மனித உரிமைகளை மதிக்கும் சகலருக்கும் மகிழ்ச்சியும் ஆறுதலும் அளிப்பதாகும். ஆசாரசீலர்களாக வரும் எவரும் எவ்வித வேறுபாடுமின்றி ஆலயத்தினுள் சென்று சுவாமி தரிசனம் செய்வதற்கு அனுமதியளிப்பதென முடிவு செய்த ஆலயதர்மகர்த்தாக்களை பாராட்ட வேண்டும்.

தீண்டாமை ஒழிப்பிற்கும் அதில் ஓர் அங்கமான ஆலயப் பிரவேசப் பிரச்னைக்கும் அமைதியான முறையில் தீர்வுகாண முடியுமென்பதற்கு கலட்டி அம்மன் கோயில், செல்வச்சந்நிதி ஆலயம் ஆகியவை சிறந்த எடுத்துக்காட்டு. தீண்டாமைப் பிரச்னையும் ஆலயப்பிரவேசப் பிரச்னையும் இங்கு சைவ சமயம் சம்பந்தப்பட்ட விஷயமாக இருப்பதால் இவற்றுக்கு சைவ சமயத்தவர்களே முன்வந்து தீர்வுகாண வேண்டுமென்றும் அமைதியான முறையில் மனமாற்ற மூலம் காணப்படும் தீர்வுதான் நிரந்தரமானதாக இருப்பதுடன் சமூக ஒற்றுமையைப் பாதுகாக்குமென்றும் இப்பத்தியில் நாம்பல தடவையும் எடுத்துக் காட்டியிருந்தோம். இப்பிரச்னைகளுக்கு சட்டம் ஓரளவு உதவியாக இருக்கும் என்பது உண்மையே. ஆயினும் சமூக ஐக்கியம் சீர்குலையாமலும் அமைதி குலையாமலும் சமூகப் பிரச்னைகள் அதுவும் மன்னெடுங் காலமாக சமூகத்தில் ஊறிப் போன பழக்க வழக்கங்களுக்கு, மனமாற்றத்தின் மூலம் தீர்வுகாணப்பட வேண்டும்.

வெவ்வேறு நோக்கங்களையும் காரணங்களையும் கொண்டுள்ள சிலர் இந்த நல்ல முயற்சிகளுக்கு பல வழிகளிலும் இடையூறு விளைக்கக்கூடும். இது இங்குமட்டுமல்ல எந்த சமூகத்திலும் எந்த நாட்டிலும் உள்ளது தான். செல்வச்சந்நிதி ஆலயக் கதவுகள் சகலருக்கும் திறந்துவிடப்படுவதைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பகுதியில் இதுவரை சகலருக்கும் கதவுகள் திறந்துவிடப்படாத ஆலயங்களின் கதவுகளைத் திறந்து விடுவதற்கு அந்த ஆலயங்களின் தர்மகர்த்தாக்களின் மனக்கதவுகள் திறக்க வேண்டும். ஊராக்,யாருடைய தூண்டுதலாக ஆலயக் கதவுகள் திறக்கப்படுகின்றன; திறக்கப்பட்டன என்பதில்லை இன்றுள்ள பிரச்னை. அமைதியான முறையில், மக்களுக்குள் மாறுபாடு காட்டாமல், ஆலயக் கதவுகள் சகலருக்கும் சுவாமி தரிசனம் கிடைக்கக்கூடியதாக திறக்கப்பட்டு வருகின்றன. இது சமூகத்தின் மனம் படிப்படியாக மாறி வருகின்றதென்பதற்கு செல்வச்சந்நிதி ஒரு அத்தாட்சி. இச்சமூகத்திலிருந்து தீண்டாமைத் தீமை நீங்கி இச்சமூகம் மேலாக முன்னேறிவரும் என்ற நல்ல நம்பிக்கையையும் இது அளிப்பதாக உள்ளது.

## செல்வச்சந்நிதி ஆலய உற்சவம்

### இன்றைய நிகழ்ச்சிகள்

வல்வெட்டித்துறை சனி

தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோவில் கொடியேற்ற உற்சவம் இன்று காலை 6-30 மணிக்கு ஆரம்பமாகும். திரு. சி. கருமரத்தினம் ஐயர் கொடியேற்றி வைப்பார். பகல் உற்சவம் வசந்த மண்டப பூசை முடிந்ததும் சுவாமி வாகனத்தில் வலம் வருவார். இரவு பூசை முடிந்த சுவாமி வீதிவலம் வருவார். அதன் பின்னர் அருட்கவி திரு. சி. விநாசித்தம்பியால் "தம்பிக்கை அருளிய தம்பிமுகன்" என்னும் விஷயம் பற்றிய கதாப்பிரசங்கம் நடைபெறும்.

செல்வச்சந்நிதி கோவிலில் பக்தர்களின் நலனை முன்னிட்டு அர்ச்சனை, காவடிகள் பிரசாதம் முதலியவற்றிற்கு பற்றுச்சீட்டுகள் வழங்கப்பட விருக்கின்றன. திருமதி க. வைத்திலிங்கம் இவ்வருட திருவிழா நிர்வாகியாகும்.

## இன்றைய பலன்

(24 - 8 - 68)

ஆவணி மீ 8 உ

சனிக்கிழமை

திதி- அமாவாசை காலை 6-23 மேல் பிரதமை.

நட்சத்திரம் - மகம் மாலை 5-29 மேல் பூரம்.

ராகுகாலம் - 9-05 10-35.

சுபநேரம் - 3-05—4-35.

இன்று பிறந்தவர்களுக்கு — காதலர் வாழ்வில் களிப்பும் கைத்தொழில் புரிவோர்க்குச் சிறப்பும் கல்வி பயிலுவோர் கவனம் செலுத்தின் சித்தியும் தன்தொழில் புரிவோர்க்கு தன விருத்தியும் குடும்பஸ்தர்களுக்கு குதூகலமான நல்ல ஆண்டாகும்.

மேஷம் - உபகாரச் சிந்தை, உள்ளப் பூரிப்பு.

ரிஷபம் - கைத்தொழில் விருத்தி, காரிய ஜெயம்.

மிதுனம் - தனகாரப் பேறு, அதிஷ்டமும் உண்டு.

கடகம் - வேண்டாத நட்பால் விபரீதம் விளையும்.

சிம்மம் - ஏக்கம் தாக்கும், தூக்கம் கெடும்.

கன்னி - நிதியில் அபிவிருத்தி, அமைதியும் பிறக்கும்.

துலாம் - உள்வீட்டுப் பூசல், உபத்திரவ மிகுதி.

விருச்சிகம் - அன்னையின் ஆசி, அமைதிக்கு வழி.

தனுசு - புதிய முயற்சி, பொதுசனத் தொடர்பு.

மகரம் அடுத்துக்கெடுப்பர், அவசரம் வேண்டாம்.

கும்பம் - அன்பு வலை, ஆனந்த நிலை.

மீனம் - தொழிற்கவலை, தொல்லைகள் பெருகும்.

சோதிடக்கலாநிதி
திருமலை வேலுப்பிள்ளை

யாழ்ப்பாணத்தில்

## தமிழ் மொழிச் சட்டம் அமுல் நடத்தப்படுகிறதா?

### ஊர்காவற்றுறை எம். பி. பிரதமரைக் கேட்கிறார்

யாழ்ப்பாணம், சனி

"யாழ்ப்பாணத்தில் தமிழ் மொழிச்சட்டம் அமுல் செய்யப்படுகிறதா? இல்லையா? விருப்பமில்லாத மக்களின் தொண்டைக்குள் தனிச்சிங்களத்தை திணிக்க கச்சேரி பயன்படுத்தப்படுகிறதா?"

யாழ்ப்பாணம் கச்சேரியில் தனிச்சிங்களத்தில் காசோலைகள் வழங்குவதை ஆட்சேபித்து, ஊர்காவற்றுறை எம். பி. திரு. வ. நவரத்தினம், பிரதமருக்கும், உள்நாட்டு அமைச்சர் திசநாயகாவுக்கும் அனுப்பியுள்ள தந்தியில் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

அத்தந்தியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: யாழ்ப்பாணத்தில் அவசரமாக பணம் பெறுபவர்களுக்கு தனிச்சிங்களத்தில் மட்டும் காசோலைகள் வழங்கப்படுகிறது. உள்நாட்டு அமைச்சரின் முடிவின்படியே இது நடப்பதாக அறிகிறேன்.

இந்தமாதிரியான நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது. இது பற்றி உடனடியாக நடவடிக்கை எடுத்து தமிழிலும் காசோலைகள் வழங்க ஒழுங்குகள் செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

### பிரதமருக்கு மகஜர்

யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் வழங்கப்படும் காசோலைகள் தனிச்சிங்களத்தில் எழுதப்படுவதாகவும், தமிழ் மக்களுக்கு வழங்கப்படும் இந்தக் காசோலைகள் தனிச்சிங்களத்தில் எழுதப்படுவது நியாயமற்றது என்று தமிழரசுக் கட்சி வாலிப முன்னணி பிரதமமந்திரி திரு. டட்லி சேனநாயக்காவுக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரொன்றில் குறிப்பிட்டுள்ளது.

(நநி)

## 'நல்ல தொழிலில் இளைஞர் ஈடுபடவேண்டும்'

சுழிபுரம், வெள்ளி

'செய்யும் தொழிலே தெய்வம் என்பதை உணர்ந்து நல்ல தொழில் கற்று அதில் ஈடுபடவேண்டும். உழைப்பதால்தான் முன்னேறமுடியும். இதன்மூலமே இளைஞர் தமக்கொரு நல்ல எதிர்காலத்தைத்தேடிக்கொள்ளலாம். இதனால் சமூகத்திலுள்ள பிரச்னைகளைத்தீர்க்க இளைஞர் உதவமுடியும்.'

இவ்வாறு திரு. பதன் சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக்கழக 12-வது ஆண்டு நிறைவுவிழாவில் கலந்து பேசுகையில் கூறினார்.

சித்தன்கேணி மகாகண பதிப்பிள்ளையார் கோவில் வீதியில் கழக தலைவர் செல்வன் சி. விசுவதயம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. தேவன் மேலும்பேசுகையில் இளைஞருக்கு சகல தொழில்களும் புகட்டப் படவேண்டும் என்றுகூறினார்.

புலவர் தமிழ்மாறன் பேசுகையில் தமிழினம் இன்று கடைப்பிடித்துவரும் வேண்டாத மூடக்கொள்கைகளை விட்டால் மேலும் முன்னேறலாம் எனக்குறிப்பிட்டார்.

கழக அங்கத்தவர்களான செல்வன்கள் க. சிவபாலன், அ. அமிர்தலிங்கம் ஆகியோரும் பேசினர்.

இசை நாடக நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

## நன்கொடை பணம் பற்றி மந்திரி முடிவு செய்வார்

### சிமெந்து தொழிற்சாலை ஊழியர் பிரச்னை

அளவெட்டி வெள்ளி

புதிய சம்பளத்திட்டம் அமுலாகும் போது தற்போதைய சம்பளத்திலும் பார்க்க சம்பளம் கூடுதலாக இருக்குமாகில் அதைப்பற்றி ஆராய்ந்து தீர்வு காணப்படும்.

காங்கேசன்துறை சிமெந்துத்தொழிற்சாலையில் வேலைபார்க்கும் ஊழியர்களுக்கும் இலங்கை சிமெந்து கூட்டுஸ்தாபன அதிகாரிகளுக்குமிடையில் நடைபெற்றபேச்சுவார்த்தையில் மேற்கண்டவாறு முடிவு செய்யப்பட்டது.

மேற்படி பேச்சுவார்த்தையில் உத்தியோகஸ்தர் சங்க நிர்வாகிகளும், சிமெந்து உற்பத்தியாளர்சங்க நிர்வாகிகளும், சிமெந்து ஐக்கிய தொழிலாளர் சங்கநிர்வாகிகளும், கூட்டுஸ்தாபன அதிகாரிகளும், வர்த்தக ஊழியர் சங்கபிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இப்பேச்சு வார்த்தையில் ஏற்பட்ட தீர்வுகள் பின்வருமாறு: சம்பளத்திட்டத்தின் மாற்றம் 66-ம் ஆண்டு ஏப்ரல் 1-ம் தேதி முதல் அமுலுக்குக்கொண்டுவரப்படும். ஊழியர்களுக்கு சமலோப நிதியில் 5வீதம் ஊழியரும், 10 வீதம் [illegible] ஆண்டுதோறும் செலுத்துதல், [illegible] தீர்மானிக்கப் [illegible] தல், வாகனம் செலுத்துனரோர் புதிய சம்பளத்திட்டத்திற்கு அமைய தரம் நிர்ணயம்செய்யப்படும். அந்தத்தொழிலில் ஏற்படும் அனுபவம், தகுதியிருத்தல் வேண்டும்.

பொறியியலாளர், வைக்கெடுப்போர் எரிபொருள் நிபுணர் சம்பளம் பற்றி மீண்டும்மந்திரியின்கவனத்திற்கு விடப்படும்.

இரவுநேர வேலைகளுக்கு சன்மானம் கொடுக்கமுடியாது.

வேலைபழகுவோருக்கு நிபுணத்துவ இரண்டாம் பிரிவு வழங்கமுடியாது. இவர்களுக்கு புதிய சம்பளத்திட்டத்தின் பிரகாரம் மூன்றாம் பிரிவு சம்பளங்கிதம் கொடுக்கப்படும். இதற்கு தரம் பிரிக்கும் சோதனையில்சித்தியடைதல் வேண்டும். வேலையிலிருந்து ஓய்வு பெறும்போது பெறக்கூடிய நன்கொடைப்பணம் பற்றிமீண்டும்மந்திரியின் பரிசிலனைக்கு விடுதல். ——

## அதிபர் ஓய்வு பெறுகிறார்

சங்கானை, வெள்ளி

முப்பது வருடங்கள் தலைமையாசிரியர் பதவி வகித்து வரும் சங்கானை அமெரிக்கன் மிஷன் பாடசாலை அதிபராகக் கடமையாற்றிவருபவரான சங்கானையைச் சேர்ந்த திரு. ஏ. ஈ. இரத்தினசாமி இம்மாதம் 28-ம் திகதி தனது சேவையிலிருந்து ஓய்வுபெறுகின்றார். இதனை முன்னிட்டு இப்பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் பிரிவுபசார விருந்தளித்து அன்பளிப்பு வழங்கினர்.

## ஐயாறன் எழுதுவது

செக்கோஸ்லோவேகியாவின் கதியைக் கேட்டதும் ஓர் அன்பர் வந்து, இந்தியா இலங்கைக்கும் ஒருநாள் இப்படித்தான் நடக்குமோ என்று கவலையுடன் கேட்டார்.

செக்நாடு இலங்கையைவிட இரட்டிப்பு பெரிது. இலங்கையின் விஸ்தீரணம் 25 ஆயிரம் சதுர மைல். செக்நாடோ சுமார் 50 ஆயிரம் சதுரமைல் விஸ்தீரணமுள்ளது. இங்கு ஜனத்தொகை சுமார் ஒரு கோடி 10 லட்சம். அங்கே ஒரு கோடி 42 லட்சத்துக்கு மேலாகும்.

கைத்தொழில், ராணுவபலம் முதலியவற்றில் செக்நாடு நம் இலங்கையைவிட பெரிதும் முன்னேற்றம் அடைந்துள்ளது. அவ்வளவு சிறந்த நாட்டுக்கே இந்த கதி ஏற்படுவதாயின் இலங்கைபோன்ற சிறிய நாடுகள் அரசியல் சுதந்திரத்துடன் நீடித்து வாழ முடியுமா? உலக வல்லரசுகள் சிறு நாடுகளை வாழ விடுமா? என்ற கவலையும், சந்தேகமும் ஏற்படுவதாக இருக்கின்றது.

ஃ ஃ ஃ

செக்நாடு செய்த குற்றம் என்ன? ஏன் ரஷ்யா அந்நாட்டின் மீது படையெடுக்க வேண்டும்? காரணம் இல்லாமல் ரஷ்யா இந்தப் பாரதூரமான நடவடிக்கையை எடுத்திருக்கமுடியாது.

சென்ற இரண்டாவது உலக யுத்தத்தின் பிறகு ஐரோப்பா இரண்டாகப் பிரிக்கப்பட்டது, ஒரு பகுதி மேற்கு வல்லரசுகளின் செல்வாக்கிலும் மறுபகுதி ரஷ்யாவின் செல்வாக்கிலும் அடங்கியது. இவ்விரு போட்டி வல்லரசுகளும் தங்கள் ஆதிக்கத்தை பலப்படுத்திக்கொள்ள முயலுகையில், ரஷ்யா செல்வாக்குக்கு அடங்கிய செக்நாடு மெதுவாக மக்களுக்கு பத்திரிகை சுதந்திரம், பேச்சு சுதந்திரம் இவைகளை அளித்து, மேற்கு வல்லரசுகளின் பக்கம் திரும்புவதாகக் கருதியே, ரஷ்யா இந்த நடவடிக்கை எடுத்திருக்க வேண்டுமென்றும், செக்நாடு மேற்கு வல்லரசுகள் பக்கம் திரும்பிவிட்டால், ரஷ்யாவைச் சேர்ந்த மற்ற சிறிய நாடுகளும் அவ்வழியே பின்பற்றி ரஷ்யா மிக பலவீனமடைந்து விடுமென்றும் அதுகாரணமாகவே, இக்கசப்பான காரியத்தை ரஷ்யா செய்திருக்கவேண்டுமென்றும் ஓர் அரசியல் விமர்சகர் கருதுகின்றார்.

ஃ ஃ ஃ

காரணம் எதுவாயினும் சரி இந்த ஒரு நடவடிக்கையால் ரஷ்யா உலக மக்களின் நம்பிக்கையைப் பெரிதும் இழந்துவிட்டது, "இது வெட்கக்கேடான காரியம். ஜெர்மக்களின் சுதந்திரம் பறிக்கப்பட்டுவிட்டது" என்று பீகிங்கூட பலமாகக் கண்டிக்கின்றது

சிறிய நாடுகள், அமைதியாக சுதந்திரமாக வாழ வேண்டுமென்றும், மக்களின் அடிப்படை உரிமை கள்பாதுகாக்கப்படவேண்டுமென்றுமே ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் ஏற்பட்டது. அந்த ஸ்தாபனத்தை அமைத்த வல்லரசுகளே இதற்கு நேர்மாறாக நடப்பதாயின்,

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செகோஸ்லாவாக்கியாவில் புதிய ஆட்சி

## மக்கள் எதிர்ப்பு நீடிப்பு

பிராக், ஆகஸ்ட் 23

செக்கோஸ்லாவாக்கியாவுக்குள் பிரவேசித்து, அதைத் தமது அதிகாரத்துக்குட் படுத்தியுள்ள ரஷ்யத் துருப்புகளின் தலைமைப்பீடம், பிராக்கில் புதிய ஒரு ஆட்சியை நிறுவியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மக்களின் வளர்ந்து வரும் சாத்வீக எதிர்ப்புக்கிடையிலேயே, இப்புதிய ஆட்சி நிறுவப்பட்டிருப்பதாகவும் செய்திகள் கிடைத்துள்ளன.

புதிய மந்திரிகள் அனைவருமே செக்கோஸ்லாவாக்கியரே என்று ரஷ்யர்களினால் நிறுவப்பட்டுள்ள சட்டவிரோத ரேடியோ அறிவித்துள்ளது. புதிய மந்திரி சபையில் தற்போதைய செக். பிரதமர் திரு. செரெனிகோ அல்லது செக். கம்யூனிஸ்ட் கட்சித்தலைவரும், செக்கோஸ்லாவாக்கியாவின் புதிய சோஷலிஸத் தாராளக் கொள்கைக்குத் தலைமை தாங்கிவருமான திரு. டூப்ஜெக்கோ இடமளிக்கப்படக்கூடாது என்று ரஷ்யர்கள் வலியுறுத்தியதாகவும் தெரியவருகிறது.

செக்கோஸ்லவாக்கியாவில் உடனடியாகப் புதியதொரு ஆட்சிச்சபை தெரிவு செய்யப்படாவிட்டால், நாட்டில் பிரவேசித்துள்ள ரஷ்யப் படைகள் ஒரு புதிய ஆட்சியை நிறுவவேண்டி ஏற்படுமென்று ரஷ்யர்கள் பயமுறுத்தியதாகவும் கூறப்படுகிறது.

தமது அழைப்பின் பேரில் தான் ரஷ்யத் துருப்புகள் செக். நாட்டினுள் பிரவேசித்தன என்ற ரஷ்யாவின் கூற்றைச் செக். தலைவர்கள் மறுத்துள்ளனர்.

## டுப்ஜெக், 3 தலைவர்கள் மாஸ்கோ கடத்தப்பட்டனர்?

செக். தலைவரான திரு. டூப்ஜெக்கும், மற்றும் மூன்று தலைவர்களும் மாஸ்கோவுக்கு விமானமூலம் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகப் பிராக் செய்தித்தாபனத்திலிருந்து வெளியான செய்தியை ரஷ்யா மறுத்துள்ளது.

ரஷ்யத் துருப்புகள் செக்கோஸ்லாவாக்கியத் தெருக்களில் நடமாட, மக்கள் தமது எதிர்ப்பைத் தெரிவிக்க, ரஷ்ய துப்பாக்கிகளும் இயந்திரத் துப்பாக்கிகளும்தெருப்பைக்கக்க, பிராக்கிலுள்ள தொழிற்சாலையொன்றில் செக். கம்யூனிஸ்ட் கட்சி ஒரு மாநாட்டை நடத்தியது. இந்த மாநாட்டுக்கு ஆயிரம் அங்கத்தவர்கள் சமுகமளித்திருந்தனர்.

இம்மாநாட்டில் கூடியிருந்தவர்கள், ஒரு பிரகடனத்தை வெளியிட்டனர். அப்பிரகடனத்தில், செக். நாட்டைவிட்டு ரஷ்ய, மற்றும் வார்ஸோ நாட்டுத் துருப்புகள் உடனடியாக வெளியேறாவிடின், இன்று நண்பகல் 12 மணியிலிருந்து நாட்டில் ஒரு பொதுவேலை நிறுத்தம் அழைப்பதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிராக்கில் ஊரடங்குச்சட்டம்

செக். தலைநகரான பிராக்கில் ரஷ்யத் துருப்புகள், மாலை 10 மணியிலிருந்து காலை 5 மணி வரை ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. தெருக்களில் எந்த நடமாட்டமும் வேண்டாம் என்று ரஷ்ய ராணுவ வாகனங்கள், ஒலிபரப்பிகள் மூலம் மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளன.

முன்னதாக, பிராக்தெருக்களில் ஆயிரக்கணக்கான மக்கள் சோவியத் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாகவும், அதைத்தொடர்ந்து துப்பாக்கிச் சூட்டுச்சத்தம் இடையிடையே கேட்டுக் கொண்டிருந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆட்சேதம் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

செக்கோஸ்லவாக்கியாவில் வாழ்க்கைமாமூல் நிலைக்குத் திரும்பிவிட்டதாக ரஷ்யச் செய்தித்தாபனமான 'டாஸ்' அறிவித்துள்ளது. ஆனாலும், நாட்டிலுள்ள கம்யூனிஸ விரோத சக்திகள் ஆபத்தான நடவடிக்கைகளில் இன்னும் ஈடுபட்டுவருவதாக அது ஒப்புக்கொண்டுள்ளது.

## வெட்கக்கேடான செயல்என்கிறது பீகிங்

செக்கோஸ்லாவாக்கிய நெருக்கடி பற்றி இதுவரை மௌனம் அனுஷ்டித்த கம்யூனிஸ்ட் சீனா, நேற்று முதற் தடவையாகத் தனது கருத்தை வெளியிட்டுள்ளது. பீகிங் மக்கள் தினசரி, ரஷ்ய ராணுவக் குறுக்கீட்டை, 'மிக மோசமான, வெட்கக்கேடான நடவடிக்கை' என விவரித்துள்ளது.

செக்கோஸ்லாவாக்கியாவின் சில பகுதிகளை ஹிட்லரின் துருப்புகள் பிரவேசித்துக் கைப்பற்றிய சம்பவத்தை ரஷ்ய நடவடிக்கை நினைவூட்டுவதாகவும் அத்தினசரி மேலும் குறிப்பிட்டுள்ளது.

செக்கோஸ்லாவாக்கியாவில் ரஷ்ய, மற்றும் வார்ஸோத் துருப்புகள் மேற்கொண்டுள்ள ராணுவ நடவடிக்கையை மிகவும் மோசமானதொரு குற்றமென ஜப்பான் ரேடியோ வர்ணித்துள்ளது.

யூகோஸ்லாவியாவில், ரஷ்யா மற்றும் வார்ஸோ நாடுகளின் தூரக அதிகாரிகள், வெளியுறவுக் காரியாலயத்துக்கு அழைக்கப்பட்டு செக்கோஸ்லவாக்கியாவில் அந்நாடுகளின் துருப்புகள் எடுத்துள்ள நடவடிக்கையைக் கண்டித்தும், அங்கிருந்து அவை உடனடியாக வெளியேறவேண்டும் என்று கோரியும் வெளியிடப்பட்டஅறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டது. இந்த அறிக்கையை ஏற்றுக்கொள்ள பல்கேரியப்பிரதிநிதி மறுத்துவிட்டார்.

## துருப்புகள் வெளியேறுமாறு பந்தோபஸ்து சபை தீர்மானம்

நேற்றிரவு, நியூயோர்க்கில், ஐ. நா. பந்தோபஸ்து சபை மீண்டும் செக்கோஸ்லவாக்கிய நெருக்கடியை விவாதத்துக்கு எடுத்தது. அப்போது, செக்கோஸ்லாவாக்கியாவிலிருந்து ரஷ்ய, வார்ஸோத் துருப்புகள் உடனடியாக வெளியேற வேண்டுமென்று கோரும் ஏழு மேற்கத்திய நாடுகளின் தீர்மானமொன்று சமர்ப்பிக்கப்பட்டது.

இத்தீர்மானத்தைச்சமர்ப்பித்த ஏழு நாடுகளும் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், கனடா, பிரேஸில், டென்மார்க், பராகுவே ஆகியனவாகும்.

அத்தீர்மானம், செக். நாட்டில் ரஷ்ய, வார்ஸோ, நாடுகள் எடுத்துள்ள நடவடிக்கை, ஒரு நாட்டின் மீது பலாத்காரம் செலுத்துவதில்லை என்று சபையின் அங்கத்தவ நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ள கோட்பாட்டுக்கு முரணானது எனக் கண்டித்துள்ளது. அந்நியத் துருப்புகள் செக். நாட்டிலிருந்து உடனடியாக வெளியேறவேண்டுமென அத்தீர்மானம் வலியுறுத்தியது.

ரஷ்ய, வார்ஸோத் துருப்புக்களை செக். நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்கு, அந்நாடுகளுடனான செக்வசக்கை அங்கத்துவ நாடுகள் பிரயோகிக்கவேண்டுமென்றும் அத்தீர்மானம் கேட்டுக்கொண்டுள்ளது.

செக். நிலைமையைத் தொடர்ந்து தனது கவனத்தில் சபைவைத்துக்கொள்ள வேண்டுமென்றும், அங்குள்ள நிலைமைக்கேற்றவாறு பொருத்தமான நடவடிக்கை எடுக்கச்சபை ஆயத்தமாக விருக்கவேண்டுமென்றும் தீர்மானம் மேலும் கேட்டுக்கொண்டுள்ளது.

சபையில் முதலாவதாகப் பேசிய எதியோப்பியப்பிரதிநிதி, செக்கோஸ்லவாக்கியாவிலான ரஷ்ய, வார்ஸோத் துருப்புகளின் பிரவேசமும், குறுக்கீடும், அங்கு சட்டபூர்வமாக நிறுவப்பட்டுள்ள அரசாங்கத்தின் சம்மதமின்றி நடைபெற்றுள்ளதாகக்குறிப்பிட்டு, அங்கிருந்து அந்நிய நாட்டுத் துருப்புகள் உடனடியாக வெளியேறவேண்டியது அவசியம் என்று கேட்டுக்கொண்டார்.

அமெரிக்கப் பிரதிநிதி பேசுகையில், செக். தலைவர்களின் வேண்டுகோளுக்கிணங்கவே தாம் அந்நாட்டினுள் பிரவேசித்துள்ளதென ரஷ்யர்கள் கூறும் சமாதானத்தைக்கேட்டு உலகம் வெறுப்படைந்துள்ளதாகக் கூறினார்.

செக். தலைவர் திரு. டூப்ஜெக், மற்றும் தலைவர்களின் இருப்பிடத்தை அறிவிக்குமாறு அமெரிக்கப் பிரதிநிதி, ரஷ்யப் பிரதிநிதியைக் கேட்டுக்கொண்டார்.

ரஷ்யப் பிரதிநிதி திரு. மாலிக், சபையில் நடைபெற்ற விவாதத்தை, 'மனதை உருக்கும் நகைச்சுவை நாடகம்' என்று வர்ணித்தார். அங்கு கூறப்பட்டதெல்லாம் உண்மைக்குமாறான தகவல் என்றும், செக். தலைவர்களின் வேண்டுகோளின்பேரிலேயே ரஷ்யா செக். நாட்டு விவகாரத்தில் தலையிட்டதாகவும் அவர் மேலும் கூறினார்.

[4-ம் பக்கம் பார்க்க]

## மீண்டும் திறக்கப்பட்டது

புன்னாலைக்கட்டுவன், விபா.

வயாவிளான் தெற்கு ஊரெழு தெசவுநிலையம், பொதுமக்கள் எடுத்துக்கொண்ட தீவிர முயற்சியின் பயனாகவும், கிராம முன்னேற்ற மாதர் சங்க அங்கத்தவர்களின் முயற்சியினாலும் மீண்டும் திறக்கப்பட்டது. இதனை ஊரெழு கிராமசேவகர் திரு. எஸ். சின்னத்துரை திறந்துவைத்தார்.

சிங்கம் மார்க்
சங்கறுத்த
தைலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

## செக். உரிமைகளைப் பாதுகாக்க இந்தியா முயற்சிக்கும்

— இந்திரா காந்தி

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி நேற்று வெளியிட்ட ஓர் அறிக்கையில், செக்கோஸ்லோவாக்கியாவின் ஐ. நா. சாஸன உரிமைகளைப் பாதுகாக்க இந்தியா தன்னாலான முயற்சியைச் செய்யும் இந்தியா எப்போதுமே உலக நாடுகளுக்கிடையே நல்லுறவுக்கும் சமாதானத்துக்கும் போராடி வந்துள்ளது என். எந்தப் பிரச்னையுமே பேச்சுவார்த்தைகள் மூலமே அன்றி பலாத்காரத்தினால் தீர்க்கப்படக்கூடாதென்ற கோட்பாட்டையும் நெடுக ஆதரித்து வந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

ஆனால், இப்போது செக்கோஸ்லோவாக்கியாவில் ஏற்பட்டுள்ள நிலைமை, இந்தத் தொடர் முயற்சிக்கு ஒரு பலத்த அடியாக விளங்குவதாகவும் திருமதி இந்திரா காந்தி குறிப்பிட்டார்.

ஜெனிவாவில் நடைபெறும் ஆயுதப் பரிகரண மாநாட்டில், தமது நாட்டில் புகுந்துள்ள ரஷ்யா வார்ஸோ ஒப்பந்த நாடுகளின் துருப்புகளை அங்கிருந்து உடனே வெளியேறுமாறு செக் தூதுக்கோஷ்டி கேட்டுக்கொண்டது. அந்த நாடுகள், செக். உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதாகவும் அத்தூதுக்கோஷ்டி குற்றஞ்சாட்டியது.

செக். தூதுக்கோஷ்டியின் வேண்டுகோளை அமெரிக்கா, பிரிட்டன், இத்தாலி, பிரேஸில் ஆகிய நாடுகள் ஆதரித்தன.

செக். குற்றச்சாட்டை வெறும் அபாண்டமென ரஷ்யப் பிரதிநிதி மறுத்தார். செக். தலைவர்களே தம்மை செக் நாட்டுக்கு அழைத்தனர் என்று அவர் மீண்டும் வாதாடினார்.

ஹங்கேரித் தூதுகோஷ்டியும், ரஷ்யாவின் நிலையை ஆதரித்தது. ருமேனியா, இவ்விஷயத்தில் ஒன்றும் பேசவில்லை. ஆனால், அந்நாட்டுத் தூதுகோஷ்டியினர், ரஷ்ய, வார்ஸோ துருப்புக்களைச் செக்கோஸ்லோவாக்கியாவிலிருந்து உடனடியாக வெளியேறவேண்டுமெனத் தமது அரசாங்கம் வெளியிட்ட அறிக்கையின் பிரதியை, ஆயுத பரிகரண மாநாட்டுப் பிரதிநிதிகளிடம் விநியோகித்தனர்.

## செக். நிலைமை சம்பந்தமாக அசோக் மேத்தா ராஜினாமா

புதுடில்லி, ஆக. 23

இந்தியாவின் பெட்ரோலியம், ரசாயனம், சமூகநலன் மந்திரியான திரு அசோக மேத்தா, இந்திய மந்திரி சபையிலிருந்து தமது ராஜினாமாவைச் சமர்ப்பித்துள்ளார். இந்தியப் பிரதம மந்திரியின், இந்திய ராஷ்டிரபதி அவரது ராஜினாமாவை ஏற்றுக்கொண்டுள்ளார்.

தற்காலிக ஏற்பாடாக, பெற்றோலியம், ரசாயனப் பொறுப்புக்களை, அவற்றுக்கான தற்போதைய இந்திய ராஜாங்க மந்திரியும், சமூக நலன் பொறுப்புக்களை இந்திய சட்ட மந்திரியும் கவனித்துவருவார்கள்.

நேற்று, இந்திய லோக சபையில், செக்கோஸ்லோவாக்கியாவில் ரஷ்யாவும், மற்றும் வார்ஸோ ஒப்பந்த நாடுகளும் எடுத்துள்ள இராணுவ நடவடிக்கையைக் கண்டித்துத் திருமதி சுசேதா கிருபளானியால் கொண்டு வரப்பட்ட ஒரு தீர்மானத்துக்கு ஆதரவாக திரு. அசோக் மேத்தா வாக்களித்திருந்தார். இத்தீர்மானம் காங்கிரஸ் அங்கத்தவர்களினால் எதிர்த்து வாக்களிக்கப்பட்டது.

இதுவே திரு. மேத்தாவின் ராஜினாமாவுக்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது.

## நெடுந்தீவுப்பிரயாணிகள் அவதி: படகுசேவை ஸ்தம்பிதம்

நெடுந்தீவு, வெள்ளி


நெடுந்தீவிற்கும் குறிகாட்டுவானுக்குமிடையே சேவையில் ஈடுபட்டுவந்த மோட்டார் படகு "எலாரு" பழுதடைந்தமையால் நெடுந்தீவு படகுசேவை கடந்த ஒரு வாரமாக ஸ்தம்பித்துப் போயுள்ளது. நெடுந்தீவு சேவைக்கெனக் கட்டப்பட்ட மற்றும் மூன்று மோட்டார் படகுகளும் பலமாதங்களாகவே பழுதடைந்த நிலையில் கிடக்கின்றன. நெடுந்தீவு கொந்தளிக்கும் ஆழ்கடலுக்கு உகந்த அரசினர் மோட்டார்படகுகள் யாவும் பழுதடைந்திருப்பதால் நெடுந்தீவுப் பிரயாணிகள் பெரும் கஷ்டத்தை அனுபவித்து வருகிறார்கள். தபால் சேவையும் இடையிடையே பாதிக்கப்பட்டு வருகிறது.

பொதுமராமத்துப்பகுதிக்குரிய இப்படகுகள் யாவும் தற்போது சேவையில் ஈடுபடாமையால் தனியார் மீன்பிடிவள்ளங்களே சேவையில் ஈடுபட்டு வருகின்றன. பிரயாணவசதியும் பாதுகாப்பும் குறைந்த இப்பகுதிகளில் பெண்களும் குழந்தைகளும் மிகவும் அச்சத்துடனேயே வேறுவழியின்றிப் பிரயாணம் செய்கிறார்கள். கொந்தளிக்கும் ஆழ்கடலைக் கடந்து கரைசேரும் பிரயாணிகளின் உடைகள் பெரும்பாலும் நனைந்து போகவே செய்கின்றன.

அச்சத்துடன் உயிரைப் பணயம் வைத்துத்தான் இப்படகுகளில் பிரயாணம்செய்வதாகப் பிரயாணிகள் தெரிவித்தனர்.


## ரோட் மாஸ்டர் பைசிக்கிளைக் கண்டு பிடிக்கும் போட்டியில் பங்கு பற்றி செல்வராகுங்கள்

ROAD MASTER ALL-STEEL BICYCLE



**ரூ 7700/-க்கு மேற்பட்ட பரிசுகள்**

1 ஆம் பரிசு ரூ. 2,500/-
அத்துடன் விற்பனையாளருக்கு ரூ. 250/-

2 ஆம் பரிசு ரூ. 1,500/-
அத்துடன் விற்பனையாளருக்கு ரூ. 150/-

3 ஆம் பரிசு ரூ. 1,000/-
அத்துடன் விற்பனையாளருக்கு ரூ. 100/-

தலா ரூ. 225/- கொண்ட 10 தேறுதற் பரிசுகள்

போட்டி விதிகள் :-

1. 1968 ஆகஸ்ட் 9-ந் தேதிக்கும் 1968 அக்டோபர் 10-ந் தேதிக்குமிடைப்பட்ட காலத்தில் ரோட்மாஸ்டர் ஸ்டான்டர்ட் 22'' பைசிக்கிள் ஒன்றனைக் கொள்வனவு செய்யும் அனைவரும் இப்போட்டியிற் பங்கு பற்றலாம்.

2. மேலே இடதுபுறத்தில் ரோட்மாஸ்டர் ஸ்டான்டர்ட் 22'' பைசிக்கிளின் படமும் அதன் கீழே 3 பைசிக்கிள்களின் சித்திரமும் காணப்படுகின்றன. நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் ரோட்மாஸ்டர் ஸ்டான்டர்ட் 22'' பைசிக்கிளை இனங்கண்டு, கொடுக்கப்பட்டிருக்கும் இடத்தில் புள்ளடி இட்டு, கூப்பனை முறைப்படி நிரப்பி, ரோட்மாஸ்டர் ஸ்டான்டர்ட் 22'' பைசிக்கிள் கொள்வனவுக்குரிய பற்றுச் சீட்டுடன் சேர்த்து "ரோட்மாஸ்டர் பைசிக்கிள் கண்டு பிடிக்கும் போட்டி", த. பெ. 1610, கொழும்பு என்னும் முகவரிக்கு 1968 அக்டோபர் 10-ந் தேதி பி. ப. 4 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கும் வண்ணம் தபாலில் அனுப்பி வைப்பதே.


3. ரோட்மாஸ்டர் ஸ்டான்டர்ட் 22'' கொள்வனவு செய்தமைக்கான பற்றுச் சீட்டு ஒவ்வொரு பிரவேசப் பத்திரத்துடனும் இணைத்தனுப்பப்படும் பட்சத்தில் ஒருவர் எத்தனை பிரவேசப் பத்திரங்களையும் அனுப்பலாம். இந்தப் பற்றுச் சீட்டில் உங்கள் பைசிக்கிளின் இலக்கமும் கொள்வனவு செய்த தேதியும் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

4. 1 ஆம், 2 ஆம், 3 ஆம் பரிசுகளும் தேறுதற் பரிசுகளும் வெகு சுலபமான, வெகு துப்புரவான, கவர்ச்சியான முறையில் சமர்ப்பிக்கப்படும் பிரவேசப் பத்திரங்களுக்கு வழங்கப்படும்.

5. சரியான பிரவேசப் பத்திரம் எதுவும் வந்து சேராவிட்டால், மேற்குறித்த ஒழுங்குப் பிரகாரம், வெகு சுலபமான, வெகு துப்புரவான, கவர்ச்சியான முறையில் கிடைக்கும் கிட்டிய பிரவேசப் பத்திரங்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

6. ஈ பீ. கிறீஸி அன்ட் கம்பனி லிமிட்டெட், கிரான்ட் அட்வேர்டைஸிங் (இலங்கை) லிமிட்டெட் தாபனங்களின் வேலை செய்யும் ஊழியரோ அவர்களின் குடும்பத்தவர்களோ இந்தப் போட்டியில் பங்கு பற்றலாகாது.

7. இந்தப் போட்டி முடிவுகள் விஷயமாகக் கடிதப் போக்குவரத்து எதுவும் வைத்துக் கொள்ளப்படமாட்டாது. உள்நாட்டு விவகார அமைச்சின் பிரதிநிதி ஒருவரையும் உள்ளடக்கியதான நடுவர் குழுவின் தீர்ப்பே முடிவானதாயிருக்கும்.




பெயர்: ..............................

முகவரி: ..............................

ஏக விநியோகத்தர்கள்: ஈ. பீ. கிறீஸி அன்ட் கம்பனி லிமிட்டெட் 35/57 ராணி வீதி, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரிக்கெட் போட்டி

# கடற்படை கோஷ்டி சாம்பியன் ஆனது

யாழ்ப்பாணம், சனி

யாழ். மாவட்ட அரசினர் கிரிக்கெட் விளையாட்டுச் சங்கத்தினரால் நடாத்தப்பட்டு வந்த கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இ. போ. ச. கிரிக்கெட் கோஷ்டியும், காரைநகர் கடற்படை வீரர் கிரிக்கெட் கோஷ்டியும் கலந்து கொண்டனர். இப் போட்டியில் முதலில் தடுப்பெடுத்தாடிய இ. போ. ச. கோஷ்டியினர் தமது சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 133 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் தம்பிராசா, சிவசுப்பிரமணியம், டானியல் ஆகியோர் முறையே 57, 22, 21 ஓட்டங்களைப் பெற்றனர். கடற்படைக் கோஷ்டியின் பந்தெறி வீரர்களாகிய டொனல் லப்பிறூய், ஆதர் லப்பிறூய் ஆகியோர் முறையே 4, 4 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

கடற்படை வீரர் தமது முதலாவது இன்னிங்ஸில் மொத்தம் 402 ஓட்டங்களைப் பெற்றனர். கடற்படைக் கோஷ்டியின் காப்டன் கென்றிக்ஸ் மிகவும் திறமையாக தடுப்பெடுத்தாடி 102 ஓட்டங்களைப் பெற்றார் மற்றும் டொனல் லப்பிறூய், பல்குருசெயின், பெரல்ஸ் ஆகியோர் முறையே 97, 67, 39 ஓட்டங்களைப் பெற்றனர். இ. போ. ச. கோஷ்டியின் பந்தெறி வீரராகிய தம்பிராசா 127 ஓட்டங்களைக் கொடுத்து 7 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

இ. போ. ச. கோஷ்டியினர் தமது இரண்டாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 126 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் வடிவேல் 47 ஓட்டங்களையும், பேகின்பநாயகம் 26 ஓட்டங்களையும், தம்பிராசா 13 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஆட்டமுடிவில் கடற்படை வீரர், இ. போ. ச. கோஷ்டியினரை இன்னிங்ஸாலும் 143 ஓட்டங்களாலும் தோற்கடித்து 'சாம்பியன்' வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றனர்.

இப்போட்டிக்கு திருவாளர்கள் கனகலிங்கம், ஜெயராசா ஆகியோர் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர். இப் போட்டிக்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். மாவட்ட நீதிபதி திரு. ஐமீக் வெற்றி பெற்ற கோஷ்டியினருக்கு பரிசில்களை வழங்கினார்.

[தே. நி]

5-வது டெஸ்ட்

## இங்கிலாந்து 272—4

லண்டன், ஆக. 21

இங்கிலாந்து கிரிக்கெட் கோஷ்டிக்கும், அவுஸ்திரேலியாக் கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையில் லண்டனில் நடைபெறும் 5-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் முதலாவது நாளான இன்று, முதலில் தடுப்பெடுத்தாடும் இங்கிலாந்துக் கோஷ்டி தமது நாலு விக்கெட்டுகளை இழந்து மொத்தம் 272 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் எற்றிச் 140 ஓட்டங்களையும் (ஆட்டமிழக்காமல்), மில்போர்ன் 8 ஓட்டங்களையும், டெக்ஸ்ரர் 21 ஓட்டங்களையும், கவுற்றி 16 ஓட்டங்களையும், கிறேவினி 63 ஓட்டங்களையும், டொலிவேரா 24 ஓட்டங்களையும் (ஆட்டமிழக்காமல்) பெற்றனர். (தே. நி)

## பெற்றோர் வழிகாட்டவேண்டும்

சுழிபுரம், வெள்ளி

"கற்க வேண்டியவற்றை, அறியவேண்டியவற்றை இளமையிலேயே அறிந்து கொள்ளவேண்டும். காலத்தை வீணாக்காது சமய அறிவை இளம் பிராயத்திலேயே கற்றுக்கொண்டால் பிற்காலத்தில் ஒரு மனிதனாக முடியும். இதற்குப் பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு வழிகாட்டவேண்டும்."

இவ்வாறு வழக்கம்பரை சனசமூக நிலைய பஜனைச் சபையினர் நடத்திய பரிசளிப்பு விழாவுக்குத் தலைமைவகித்துப் பேசிய ஆசிரியர் திரு. க. சீனிவாசகம் குறிப்பிட்டார்.

அரசாங்க கேள்விகள் பொதுவேலைப் பகுதி

என். 2326 - (1) முல்லைத்தீவு மாவட்டம், 132 - 139 மைல்கல் கண்டி - யாழ்ப்பாணம் வீதியில் குறிக்கப்பட்ட இடங்களில் 400 கியூப் 2" அங்குலக் கல்லும், 40 கியூப் 3/4" அங்குலக் கல்லும் ஒழுங்குபடுத்தி வழங்குதல். (2) முல்லைத்தீவு மாவட்டம் 127, 140, 152 மைல்கல் கண்டி - யாழ்ப்பாணம் வீதியில் குறிக்கப்பட்ட இடங்களில் 120 கியூப் 3/4" அங்குலக்கல் ஒழுங்குபடுத்தி வழங்குதல். கேள்விகள் முடிவுதிகதி 18-9-68.

இதன் முழு விபரங்களுக்கும் 23-8-68 இல் வெளியான அரசாங்க வர்த்தமானியின் 1-ம் பகுதி, 11-ம் தொகுதியைப் பார்க்கவும்.

GP 7057

## யாழ்ப்பாண மாநகர சபை

மின்சாரம் பாவனையாளர் யாவரதும் முக்கிய கவனத்திற்கு

5-7-68 ஈழநாடு பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 4-7-68ம் திகதிய அறிவித்தலைத் தொடர்ந்து, மின்சாரப் பாவனையாளர் யாவரதும் முக்கிய கவனத்திற்கு அறியத்தருவது யாதெனில் தற்பொழுது இறுதி (சிவப்பு) அறிவித்தல் பாவனையாளருக்குக் கொடுக்கப்பட்ட 48 மணி நேர முடிவில், மின் வாடகைக்குரிய நிலுவைகள் செலுத்தப்படாமைக்காக மின் இணைப்பு துண்டிக்கப்படுவதால், மின் இணைப்பு துண்டிக்கப்படுவதைத் தவிர்க்குமுகமாக, தங்களுடைய மின்சார நிலுவைகளை முழுமையாகவும் உடனடியாகவும் செலுத்தி எம்முடன் ஒத்துழைக்குமாறு சகல மின்சாரப் பாவனையாளர்களையும் தயவாகக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

க. பேரம்பலம்
மாநகர ஆணையாளர்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
20-8-1968. 943

## பஸ் சேவை பற்றி புகார்

உரும்பராய், வெள்ளி

மறவன்புலோ - சேரதீவு, தனங்கிளப்பு - கொடிகாமம் பஸ் சேவையின் சீர்கேடு பற்றி மறவன்புலோ கிராம முன்னேற்றச்சங்கம், கைதடி நாவற்குழி இ. மு. சங்கம், கோயிலாக்கண்டி இ. மு. சங்கங்கள் இ. போ. ச. பொது முகாமையாளருக்கும் கிராம சபைத் தலைவருக்கும், சாவகச்சேரி எம். பி.க்கும் மகஜர் அனுப்பிவைத்துள்ளன. இந்த சேவையை சீர்படுத்துமாறும் இவை கேட்டுக்கொண்டுள்ளன.

## கேள்விவிளம்பரம்

ஊர்காவற்றுறைப் பட்டின சபை

1968-ம் ஆண்டு ஆவணி மாதம் 28-ம் திகதி பிற்பகல் 3-00 மணிவரை கீழ்க்காணும் வேலைகளுக்கு 'சீல்' வைத்த கேள்விகள் (ரெண்டர்கள்) ஏற்றுக்கொள்ளப்படும்.

1. வேலணைவீதி 2-ம்ஒழுங்கைக்குக் கல்பரவித் தாரிடல்.
2. கருவில் வீதி 2-ம் ஒழுங்கைக்குக் கல்பரவித் தாரிடல்.
3. கடற்கரை வீதிக்கு வடிகால் அமைத்தல்.
4. பாலாவி வீதிக்குக் கல்பரவித் தாரிடல்.

ஏனைய விபரங்களை காரியாலய நாட்களில் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(ச. ம. அல்பிறட்,)
தலைவர்.
பட்டின சபை,
ஊர்காவற்றுறை.

பட்டின சபை
அலுவலகம்,
ஊர்காவற்றுறை,
21-8-1968. 944

## வரி விளம்பரம்

விற்பனைக்கு

நல்லூர் கோவில், இந்து மகளிர் கல்லூரி ஆகியவற்றிற்கு அண்மையில் வீடு, கிணற்றுடன் கூடிய 13/4 பரப்புக் காணி, 21/6 மூன்றும் ஒழுங்கை பலாலி வீதி சுந்தர்மடத்தடியில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு ச. சின்னத்தம்பி, குருமன்காடு வவுனியா. 101

வாடகைக்கு

வீடு

ஆறு அறைகள், கார்கராஜ், பைப் தண்ணீர் வசதி முதலிய சகல நவீன வசதிகளும்கொண்ட வீடு செப்டம்பர் முதல் வாடகைக்கு உண்டு. 60 விடாக்விவீதி, யாழ்ப்பாணம். நாகவிகாரைக்கு எதிர்ப்புறம். 35

## நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம், வெள்ளி

வலிகாமம் வடக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத் தலைவராக மீண்டும் பண்டிதர் க. நாகலிங்கம் தெரிவுசெய்யப்பட்டார்.

திருவாளர்கள்: சு. அம்பலவாணர், சி. தம்பையா, கே. முத்தையா, எஸ். துரைசிங்கம் ஆகியோர் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

## வெள்ளி விழா

சுழிபுரம், வெள்ளி

வலிகாமம் மேற்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாஜத்தினர் தமது சங்க 25வது ஆண்டுவிழாவைக் கொண்டாட ஏற்பாடுகள் செய்துள்ளனர். செப்டம்பர் மாதம் 4ந் தேதி இவ்விழா நடைபெறவிருக்கின்றது.

இந்நிலையம் கடந்த பல காலத்திற்கு பூட்டிக் கிடந்தது.


இன்று முதல் ஆரம்பம்!

மானிப்பாய்

வெஸ்லி சினிமா

தினசரி 2-30, 6-30, 9-30

எஸ். எஸ் ராஜேந்திரன் — தேவிகா
முத்துராமன் — காஞ்சனா — சோ
நடித்த

மறக்க முடியுமா?

வின்ஸர்
தினசரி 3 காட்சிகள்
ரவிச்சந்திரன்
ஜெயலலிதா
பாலாஜி நாகேஷ்
உதயச்சந்திரிகா
நடித்த
மாடி வீட்டு மாப்பிள்ளை

2-வது வாரம்
ராஜா
[யாழ்ப்பாணம்]
தினசரி 2-30, 6-30, 9-45
AVM.ராஜன் - புஸ்பலதா
நடித்த
கற்பூரம்

59-வது தினம்!
ராணி
(யாழ்ப்பாணம்)
ஜெமினி — சரோஜாதேவி
நடித்த
பணமா பாசமா

3-வது வாரம்
மனோகரா
[யாழ்ப்பாணம்]
தினசரி
6-30, 9-30 மணி
ஜெய்சங்கர் - விஜயலட்சுமி
கே. பி. சுந்தராம்பாள்
நடித்த
உயிர்மேல் ஆசை

REGAL JAFFNA
Daily at
4 45 7-00 & 9 45 p.m.
Frazer Macintosh
Radmila Kovic
in
THE SOLDIER

பிளாசா (கொழும்பு) — மைலன் (கொழும்பு) — வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
கிங்ஸ்லி (கொழும்பு) — விஜயா (மட்டுநகர்) — ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)

ரவிச்சந்திரன்
ஜெயலலிதா
மனோரமா
நாகேஷ்
முத்துராமன்
நடித்த





ஸ்ரீ விநாயகா பிக்சர்ஸ்

நான்

கெப்பிட்டல்
(கொழும்பு)
ராஜ்கபூர் — வைஜயந்திமாலா
நடித்த
சங்கம்

அனுபவமுள்ள வைத்தியரின்
மேற்பார்வையில்
சித்த வைத்திய மருந்துகள்
ஆயுர்வேத மருந்துகள்
மருந்துச் சரக்குகள்
கிடைக்குமிடம்:
சுந்தரம் பிறதர்ஸ்
73, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யாவில்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

## பேச்சுவார்த்தை பயனளிக்கவில்லை

நியூயோர்க், ஆக. 23

ஆக்கிரமிப்புச் செய்துள்ள சோவியத் துருப்புக்களின் தலைமை அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் பயனளிக்காததால் தாம் மாஸ்கோ செல்ல முடிவு செய்ததாக திரு. ஸ்வபோடா நாட்டு மக்களுக்கு மாஸ்கோ செல்வதற்கு முன்னர் 'சுதந்திர வானொலி' மூலம் விடுத்த செய்தியில் அறிவித்திருந்தார். மாஸ்கோவிலிருந்து இன்றிரவே திரும்பிவிடுவேன் என்று அவர் கூறியுள்ளார். ஆக்கிரமிப்பு துருப்புகளுடன் ஒத்துழைக்கத் தாம் மறுத்துவிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

செக்கோஸ்லவாக்கிய அரசின் அனுமதியுடனேயே தாம் ரஷ்யா செல்வதாக அவர் சொன்னார்.

### நூற்றுக்கணக்கில் கைது

செக்கோஸ்லவாக்கியாவில் தாராளப் போக்குள்ள தலைவர்களும் அதிகாரிகளும் நூற்றுக்கணக்கில் கைது செய்யப்பட்டு வருவதாக ஒரு செய்தி கூறுகிறது.

### இந்தியாவின் நிலை

ஐ. நா. பாதுகாப்புச் சபையில் மேற்கு நாடுகள் கொண்டு வந்த தீர்மானத்தை இந்தியா ஆதரித்து வாக்களிக்காததற்காக இந்திய அரசாங்கத்தை கம்யூனிஸ்ட் அல்லாத எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் லோகசபையில் கண்டித்துப் பேசினர். இதற்கு பிரதமர் இந்திரா பதிலளிக்கையில் செக்கோஸ்லவாக்கிய மக்களுக்கு இந்தியாவின் ஆதரவு உண்டென்றும் பாதுகாப்புச்சபை தீர்மானத்தின் பல அம்சங்களை இந்தியா ஆதரித்திருக்கிறதென்றும் "கண்டனம்" என்னும் வார்த்தைப் பிரயோகத்தினால் செக். மக்களுக்கு அதிக பயன் கிடைக்காதென்றும் சொன்னார்.

தமிழ்நாட்டில் 15 தமிழக சட்டசபை அங்கத்தவர்கள் சோவியத் கான்சல் காரியாலயத்துக்குச் சென்று மகஜர் ஒன்றைக் கொடுத்தபோது அங்குள்ள அதிகாரி அதை ஏற்க மறுத்துவிட்டார்.

### எல்லை திறப்பு

செக்கோஸ்லவாக்கியாவுக்கும் ஆஸ்திரியாவுக்குமிடையேயுள்ள எல்லை மீண்டும் திறக்கப்பட்டுவிட்டது.

### தலைவர்களின் பாதுகாப்பு

காவலில் வைக்கப்பட்டுள்ள செக்கோஸ்லவாக்கிய தலைவர்களுக்கு உயிருக்கு பாதுகாப்பளிப்பதற்கான முயற்சிகளைச் செய்வதற்கு ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் தமது சொந்தப் பிரதிநிதி ஒருவரை செக்கோஸ்லவாக்கியாவுக்கு அனுப்பிவைக்க வேண்டுமெனக் கோரும் பிரேரணை ஒன்றை ஐ. நா. பாதுகாப்புசபையில் கனடா பிரதிநிதி கொண்டுவந்துள்ளார். இப்பிரேரணையை அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகியவைகளும் ஆதரித்துள்ளன. "துருப்புக்களை வெளியேற்றக் கோரும்" தீர்மானத்தை ரஷ்யா "வீட்டோ" உபயோகித்து தடைசெய்ததுபோல இப்பிரேரணையையும் தடைசெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## பாதுகாப்பு சபை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னார். புதிய மத்திய கமிட்டிக்கு 150 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

### ஆதரிக்குமாறு வற்புறுத்து

ரஷ்ய துருப்புகளின் தலைமைப்பீடம், செக். ஜனாதிபதி திரு. ஸ்வபோடாவைப் புதிதாக நிறுவப்பட்டுள்ள ஆட்சியாளரை அங்கீகரிக்குமாறு வற்புறுத்தி வருவதாகக் கூறப்படுகிறது.

ஆனால் திரு. ஸ்வபோடா சட்டபூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமர் திரு. ஸெர்னிக் தலைமையிலான மந்திரிசபையையே தாம் ஆதரிக்க முடியும் என்று உறுதியாகத் தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

### மக்களின் எதிர்ப்பை காட்டும் படங்கள்

செக்கோஸ்லவாக்கியாவில் ரஷ்ய துருப்புகளுக்கு மக்கள் தெருக்களில் கூடிநின்று காட்டிய எதிர்ப்பை விவரிக்கும் செய்திப்படங்கள் ஐரோப்பாவில் டெலிவிஷன் மூலம் காண்பிக்கப்பட்டுள்ளன. இந்தப் படங்கள் செக். பத்திரிகை படப்பிடிப்பாளர் சிலரால் வியன்னாவுக்குக் கடத்திச் செல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

உனக்கு விமோசனமேது? அமைதி ஏது?

உலகிலே பெரிய வல்லரசுகள்தான் சுதந்திரமாகவாழ முடியுமா? சின்ன நாடுகள் அடிமைப்பட்டுத்தான் வேண்டுமா? இப்போது மூன்றாவது உலக யுத்தத்துக்கு அடிகோலப்படுகிறதா? தெய்வம்தான் உலக மக்களை இந்த வல்லரசுப் போட்டி ஆபத்திலிருந்து காக்கவேண்டும்,

ஃ ஃ ஃ

பெருகலாந் தவம்
பேதைமை தீரலாம்
திருக லாகிய
சிந்தை திருத்தலாம்
பருகலாம் பர
மாயதோ ரானந்தம்
மருக லானடி
வாழ்த்தி வணங்கவே.

—அப்பர் சுவாமிகள்

இப்படங்களில் சோவியத் டாங்கிகளைச் சூழ்ந்து நின்று எதிர்ப்பைத் தெரிவிக்கும் மக்களும், மக்களின் கரங்களில் இருந்த அட்டைகளில் 'சோவியத் துருப்புகளே திரும்பிப் போ' போன்ற சுலோகங்கள் காணப்பட்டதாம்.

பிராகில் தொடர்ந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் தொபனத்தாரால் யாழ்ப்பாணம் இலக் கோவில் வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிடப்பட்டு ஆகஸ்ட் மாதம் 24-ம் திகதி சனிக்கிழமை வெளியிடப்பட்டது.

## அணிவகுப்பு

திருக்கோணமலை, வெள்ளி

சீனன்குடாவிலுள்ள விமானப் படை விங்கமாண்டர் விஸ்மார்ஷல் வர்ணன் அமரசேகரா தமது வருடாந்தப் பரிசோதனைக்கு வந்தபோது கொமாண்டிங் உத்தியோகத்தர் ஹரி குணதிலகாவின் கண்காணிப்பில் விமானப் படை வீரரின் அணிவகுப்பு ஒன்று நிகழ்ந்தது. கடற்படை வீரரின் பாண்டு வாத்தியத்தின் இணங்க 75 விமான வீரர்களும், 13 உத்தியோகத்தர்களும் அணிவகுப்பை நிகழ்த்தினர்கள். விமான வீரர்கள் அணிவகுப்பின் கம்பீரமாகத் தோற்றமளித்தனர். இந்த வைபவத்தையொட்டி விமானப் படையினரின் முகாம் வெகுவாக அலங்கரிக்கப்பட்டிருந்தது.

## இறந்த பின்பும்...

திருக்கோணமலை, வெள்ளி

திருக்கோணமலை அரசினர் ஆஸ்பத்திரி வார்ட்டில் செவ்வாய்க்கிழமை நண்பகல் மரணமான ஒருவரின் சடலம், மாலை 5-00 மணி வரையில் சவ அறைக்குள் கொண்டுபோக முடியாமல் இருந்ததாம். ஆஸ்பத்திரியைச் சேர்ந்த அத்தனை கங்காணிமார்களும் மற்றும் சிறு தொழிலாளிகளும் திடீர் வேலைநிறுத்தத்தில் குதித்ததே இதற்குக் காரணமாகும். இந்த ஆஸ்பத்திரியைச் சேர்ந்த ஒருசில குமாஸ்தாக்கள் அந்தப் பிரேதத்தைச் சவ அறைக்குள் கொண்டுசென்றனர்.



# பதினொரு காரணங்களை கருத்திருமன் தெரிவித்தார்

## மதியழகன் ஒழுங்கு பிரேரணை நிராகரிப்பு

சென்னை, ஆக. 23

திராவிட முன்னேற்றக் கழக அரசின்மீது தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி கொண்டுவந்திருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்று தமிழ்நாடு கீழ் சட்டசபையில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரேரணையைச் சமர்ப்பித்துப் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. பி. ஜி. கருத்திருமன் தி. மு. க. அரசின் மீது நம்பிக்கையில்லை என்பதற்குப் பதினொரு காரணங்களைக் கூறினர்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையைச் சபையில் விவாதிக்கக்கூடாது என்று தி. மு. க. அங்கத்தவர் திரு. அரங்கநாதன் ஒழுங்குப் பிரச்னை ஒன்றைக் கொண்டுவந்தார். திரு. கருத்திருமன் தெரிவித்த பதினொரு காரணங்களில் பலவற்றை அவர் பத்திரிகைகளில் வெளியிட்டிருப்பதாகவும், சபையில் பிரேரணை சமர்ப்பிக்கு முன் அவை பத்திரிகையில் வெளியிடப்பட்டது தவறென்றும் அவர் தெரிவித்தார்.

இந்த ஒழுங்குப் பிரச்னையின்மீது உரிமைப் பிரச்னை ஒன்றை சுதந்திரா அங்கத்தவர் டாக்டர் ஹாண்டே கிளப்பினர். டாக்டர் ஹாண்டேயின் பிரேரணையை உபசபாநாயகர் புலவர் கோவிந்தன் நிராகரித்தார். திரு. அரங்கநாதன் பிரேரணை குறித்துப் பிறகு தீர்ப்பு வழங்குவதாக அவர் கூறினர்.

திரு. கருத்திருமனின் நம்பிக்கையில்லாப் பிரேரணை சபையின் 68வது சட்டவிதிக்குப் புறம்பானதென்றும் அவர் தெரிவித்துள்ள காரணங்களில் பலவற்றை சபை ஏற்கனவே விவாதித்திருப்பதாகவும் கூறி, உணவு அமைச்சர் திரு. மதியழகன் கொண்டுவந்த ஒழுங்குப் பிரச்னையையும் உப-சபாநாயகர் நிராகரித்தார்.

### ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**சனி 24—8—68**

[செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00]

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ சந்தித்தலை, 6-40 கத்தோலிக்க சிந்தனை, 6-45 தமிழ்ப் பாடல்கள், 7-30 குரல்வளை, 8-00 இசைவேளை, 8-15 இன்னிசைகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர் வேட்கை.

இரவு 6-15 வினா — சந்தரலட்சுமி செல்வராசா, 7-00 கிராமசஞ்சிகை, 7-30 நேயர் கடிதங்கள், 7-45 தொடர் நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-45 ஜனரஞ்சகம், 10-15 தேர்ந்த இசை.

# 15 அம்ச கோரிக்கைகள் பெற போராட்டம்

## மோட்டார் தொழிலாளர் சங்கமுயற்சி

யாழ்ப்பாணம், சனி

"இலங்கைப் போக்குவரத்துச் சபை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து வளர்ந்துவரும் பிரச்னைகளிலிருந்தும், சம்பள முரண்பாட்டிலிருந்தும் தொழிலாளர்கள் விடிவுபெற நாடுபரந்த ஒரு போராட்டத்தை நடாத்த அனைவரும் ஒன்றுபடல் வேண்டும்."

இவ்வாறு இலங்கைமோட்டார் தொழிலாளர் சங்கத் தலைவரான திரு. சமல் டி. சில்வா தெரிவித்தார்.

கோண்டாவில் இ. போ. ச. டிப்போவில் நடைபெற்ற மோட்டார் தொழிலாளர் சங்கக் கூட்டத்தில் தாய்ச் சங்கத் தலைவரான திரு. சில்வா மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

சில அரசியல் கட்சிகள் தமது சுயநலத்துக்காக தொழிலாளர்கள் மத்தியில் வகுப்புவாதக் கூச்சல் போட்டு அவர்களின் ஐக்கியப்போராட்டத்தைக் குலைத்துக்கொண்டு வருகிறார்கள். ஆனால் எமது சங்கம் நிர்வாக சபையினருடன் நீண்டகாலமாக நடாத்திய போராட்டத்தினால்தான் தொழிற்சங்கங்களின் கூட்டுக் கமிட்டியை கூட்ட நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இதற்காக 15 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நாம் நடாத்தவிருக்கும் போராட்டத்துக்கு தொழிலாளர்கள் அனைவரும் ஒன்று சேரவேண்டும் எனவும் திரு. சில்வா கேட்டுக்கொண்டார்.

திரு. எஸ். தருமராஜா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திருவாளர்கள் என். ஜெயசீலன், தர்மராசா ஆகியோரும் பேசினார்கள்.

(ஈ. நி.)

## தொழில்நிலையங்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களில் முன் ஐக்கியமுன்னணி சபையின் ஆதரவின் அமைக்கப்பட்டு முடிவெடுத்தது.

# ஓர் அறிவிப்பு

1-9-68 தொடக்கம் 'ஈழநாடு' தினப்பத்திரிகையின் விலையில் மாற்றம் செய்யப்பட வேண்டியுள்ள தென்பதை வாசகநேயர்களுக்கும் பத்திரிகை விற்பனையாளர்களுக்கும் வருத்தத்துடன் அறிவித்துக்கொள்கிறோம். 'ஈழநாடு' தினப்பத்திரிகை எட்டுப்பக்கங்களுடன் வெளிவருமென்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பத்திரிகைக் காகிதம் முதலியவற்றின் விலைகள் அதிகரித்துவந்தபோதிலும் வாசகநேயர்களுக்குக் குறைந்த விலையில் நிறைந்த செய்திகளைக் கொடுக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் 'ஈழநாடு' பத்திரிகையின் விலையை சென்ற பல வருடங்களாக உயர்த்தாமலிருந்தோம். மற்றும் பல பத்திரிகைகளின் விலைகள் அதிகரிக்கப்பட்டபோதிலும் 'ஈழநாடு' மட்டும் ஒரே விலையில் வாசகநேயர்களுக்குக் கிடைத்துவந்தது. ஆயினும் செலவுகள் சமாளிக்க முடியாதபடி அதிகரித்துவருவதால் எமது விருப்பத்துக்கு மாறாக 'ஈழநாடு' தினப்பத்திரிகையின் விலையை உயர்த்தவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இதேசமயம் வழமைபோல் உடனுக்குடன் நல்ல செய்திகளை நிறையக் கொடுக்கவேண்டுமென்பதற்காக 'ஈழநாடு' தினப்பதிப்பின் பக்கங்களையும் அதிகரிக்கத் தீர்மானித்திருக்கிறோம்.

1-9-1968-ந் திகதி முதல் 'ஈழநாடு' தினப்பதிப்பு ஒரு பிரதியின் விலை 15 சதமாக இருக்கும்.

'ஈழநாடு' வாரமலர் விலையில் மாறுதல் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org